கொடுக்கப்பட்ட பணம் வீணாகப் போகிறது. ஆகவே இன்வெஸ்டிகேஷன் நடத்தி அதிலே தண்ணீர் கிடைக்கும் கிராமங்களிலே மட்டும் இன்வெஸ்டிகேஷன் சார்ஜ் வாங்க அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: தலைவரவர்களே, அநேகமாக இப்படிப்பட்ட சிக்கல் இதுவரையில் வரவில்லை. அப்படி வருமானால் அதுபற்றி யோசிக்கப்படும்.

கோட்டூர்—பொங்காளியூர் சாலை.

*347 வினா—திரு. இ. ராமசாமி. மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா.

பொள்ளாச்சி தாலுக்கா, கோட்டூர்—பொங்காளியூர் வழி தேங்காய்பாறை நெடுஞ்சாலைக்கு தார் போடும் பணி தற்போது எந்நிலையிலுள்ளது?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி. தலைவரவர்களே, தார் போடும் பணி முடிவடைந்துள்ளது.

பொள்ளாச்சி நகராட்சி ஊழியர் குடியிருப்பு.

* 348 வினா டாக்டர் எச் வி. ஹாண்டே: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) பொள்ளாச்சி நகரமன்றம் நகராட்சி ஊழியர்களுக்கு வீடு கட்டுவதற்கென நிலம் வாங்கத் தீர்மானித்துள்ளதா?

(இ) ஆமெனில், ஏற்கனவே அரசாங்கம் மூலம் கொடுக்கப்பட்ட நிலத்தினை இதற்கென உபயோகிக்காமல் தற்சமயம் புதிதாக நிலம் வாங்கக் காரணங்கள் யாவை?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: (அ) ஆம்.

(இ) பொள்ளாச்சி நகராட்சிக்கு ஏற்கனவே அரசாங்கத்தின்மூலம் இதற்கென அரசு நிலம் எதுவும் ஒதுக்கப்படவில்லை.

குடிசைப் பகுதி மாற்றுவாரிய குடியிருப்புகள்.

*349 வினா : டாக்டர் எச். வி. ஹாண்டே: மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—?

(அ) குடிசை மாற்றுவாரியத்தால் கொடுக்கப்பட்டுள்ள வீடுகளில் குடியிருப்போர் ஊதியத்திற்கு ஏற்றாற்போல் வாடகை செலுத்த வேண்டுமென ஆணையிடப்பட்டுள்ளதா?

(இ) ஆமெனில், அதன் காரணங்கள் யாவை?